# இலங்கைச் சாரணர் சங்கம்

இலங்கைச் சாரணர் சங்கம் - வளர்ந்த தலைவர்களுக்கான
பயிற்சியின் செயல்பாட்டு விபரம்

1. இலங்கைச் சாரணர் சங்கம் தலைவர்களுக்கான பயிற்சி மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

    a) பிரிவுத் தலைவர்களுக்கான பயிற்சி

    b) பிரிவுத் தலைவர்களுக்கு பயிற்சியளிப்பவர்களுகான பயிற்சி

    c) சாரணர் குழு தலைவர்களுக்கான, ஆணையாளர்களுக்கான, பொது அதிகாரிகளுக்கான, நிர்வாகத்தினர்களுக்கான பயிற்சி

2. தேசிய பயிற்சித் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் பெற்ற பயிற்றுனர் தலைவர் (L.T.), உதவி உதவிபயிற்றுனர் தலைவர் (A.L.T.) ஆகியவர்களை உள்ளடக்கியதே தேசிய பயிற்றுவிப்பு அணி.

3. தேசிய பயிற்சி ஆணையாளர், இலங்கைச் சாரணர் சங்கத்தின் சிரேஸ்ட தலைவர்களுக்கான பயிற்சி தொடர்பாக பிரதம ஆணையாளருக்கு பொறுப்புடையவர், மேலும் இது சம்பந்தமான தேசிய பயிற்றுவிப்பு அணி, தேசிய பயிற்சி ஆணையாளருக்கு பொறுப்பாவர்.

4. பயிற்றுனர் தலைவர் (L.T), உதவிபயிற்றுனர் தலைவர் (A.L.T), ஆகியவர்களின் நியமனங்களை தேசிய பயிற்சி ஆணையாளரின் சிபாரிசின் பேரில் பிரதம ஆணையாளரால் வழங்குவார். இந் நியமனப்பத்திரம் ஒருவருட காலத்திற்கு மாத்திரமே செல்லுபடியாகும். சேவைதொடர்வதெனின் ஒவ்வொரு வருடமும் நியமனப்பத்திரத்தை புதுப்பிக்க வேண்டும். எதிர்வரும் **இரண்டு வருடத்திற்காக**, பயிற்றுனர் தலைவர் (L.T), உதவி பயிற்றுனர் தலைவர் (A.L.T) ஆகியவர்களின் நியமனப் பத்திரம் புதுப்பிக்கப்படாத பட்சத்தில் அவை ரத்துச் செய்யப்படும்.

5. தேசிய பயிற்சி ஆணையாளரின் சிபாரிசின்படி, பிரதம ஆணையாளரால் மேற்கூறப்பட்டவர்களின் நியமனப்பத்திரங்கள் எந்நேரத்திலும் ரத்துச்செய்யப்படலாம்.

6. **வளர்ந்தோருக்கான பயிற்சி.**

    I.வளர்ந்தோருக்கான பயிற்சி மூன்று (03) வகையாக பிரிக்கப்படும.
    குருளைச்சாரணர்பிரிவு, சாரணர் பிரிவு, திரிசாரணர் பிரிவு.

    II.பிரிவுத் தலைவர்களுக்கான பயிற்சி இலங்கைச் சாரணர் சங்கத்தினால் 05 கலைக்கூறுகளாக நடாத்தப்படும். இதன் அட்டவணை அடுத்த பக்கத்தில்:

**III அட்டவணை (2)**

| பயிற்சி | நியமனப்பத்திரம் | செல்லுபடியாகும் காலம் | சீருடை |
|---|---|---|---|
| கலைக்கூறு I | அனுமதிக்கான அங்கீகாரக் கடிதம் (LETTER OF AUTHORITY) | 2 வருட காலம் அதன்பின் புதுப்பிக்கப்படமாட்டாது | பூரண சீருடையுடன், அவர்களின் துருப்பு கழுத்துப்பட்டி லொக்கி |
| கலைக்கூறு II | அங்கீகரிக்கப்பட்ட ஆணைப்பத்திரம் (WARRANT) | 1 வருட காலம் மட்டும் மீண்டும் புதுப்பிக்கப்படவேண்டும் | பூரண சீருடை, துருப்பு கழுத்துப்பட்டி, கில்வெல் வொக்கிள் |
| கலைக்கூறு IV | ஆணைப்பத்திரம் (WARRANT) | ஆணைப்பத்திரம் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்க வேண்டும் | பூரண சீருடை, கில்வெல் வொக்கிள் |
| கலைக்கூறு V | ஆணைப்பத்திரம் (WARRANT) | ஆணைப்பத்திரம் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்க வேண்டும | பூரண சீருடை, **கில்வெல் கழுத்துப்பட்டி**, மற்றும் கில்வெல் லொக்கில் தருசின்ன மணிமாலை |

IV. கலைக்கூறு I, II, IV பயிற்சியின் தேர்ச்சி அறிக்கைகள், தேசிய பயிற்சி ஆணையாளர் அங்கீகரிக்கப்பட்ட நாளிலிருந்து செல்லுபடியாகும்.

V. ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் ஒரு பிரிவினருக்கு ஒரு கற்கைநெறிக்கு மேல் நடாத்தக் கூடாது.

VI. தரு சின்னப்பயிற்சிக்கு பங்கேற்பதாயின் **20 வயது** பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும்.

VII. தருசின்னம் **22 வயது** பூர்த்தியின் பின்புதான் வழங்கப்படும்.

**VIII. கலைக்கூறு IV பயிற்சிக்கு பின், பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி முதல், கலைக்கூறு V ற்கான ஒப்படைகள் தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும்.**

**IX. கலைக்கூறு IV பயிற்சிக்கு பின், இரண்டு வருட காலப்பகுதிக்குள் ஒப்படைகள் அனைத்தையும் நிறைவுசெய்தல் வேண்டும். விசேட காரணங்கள் அடிப்படையில் மாத்திரம், காலத்தை நீடிப்புச் செய்வதற்கு, தேசிய பயிற்சி ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெறுதல் அவசியம்.**

X. தேசிய பயிற்சி ஆணையாளரின் நேர்முகப்பரிட்சையின் பின்பே தரிசின்னம் வழங்குவது தீர்மானிக்கப்படும்.

XI. தரிசின்னம் வழங்குவது, தேசிய பயிற்சி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நாளில் இருந்து செல்லுபடியாகும்.

XII. ஒரு பிரிவில் தருசின்னம் பெற்றவர்கள் இன்னொரு பிரிவில் பயிற்சி பெறுவதாயின் தருசின்னம் பெற்ற பிரிவில் இரு வருட சேவை செய்தபின்தான் மற்றைய பிரிவின் கலைக்கூறு I இல் பயிற்சி பெறமுடியும். இதன்பின் அது சம்பந்தமான பிரிவில் 1ம் கலைக்கூறு முடிந்தபின் அனுமதிக்கடிதம் பெற்றுக் கொள்ளலாம்.

7. **பிரிவுத் தலைவர்களுக்கான பயிற்சியாளர்களின் பயிற்சி.**

a) இவர்களுக்கான பயிற்சி 2 வகையாக உள்ளடங்கப்பட்டுள்ளது.

i. உதவி பயிற்றுனர் தலைவர் (A.L.T) பயிற்சி பாடத்திட்டத்தின் மூலம், உதவி பயிற்றுனர் தலைவருக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

ii. பயிற்றுனர் தலைவர் (L.T) பயிற்சி பாடத்திட்டத்தின் மூலம் பயிற்றுனர் தலைவருக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

b) பயிற்றுனர் தலைவர் பயிற்சி/உதவிப்பயிற்றுனர் தலைவர் பயிற்சிக்கு விண்ணப்பிப்பவர்கள் தேசிய பயிற்சி ஆணையாளர் மற்றும் அவர்களால் நியமிக்கப்படும் மூன்றுக்குக் குறையாத பயிற்சி தலைவர்களினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றி தேர்சிபெற வேண்டும்.

8. **உதவி பயிற்றுனர் தலைவர் பயிற்சி பாடத்திட்டத்திற்கான தகைமை.**

a) வளர்ந்தோருக்கான பயிற்சி சம்பந்தமான சாரணர் செயல்திட்டம், சாரணர் நடைமுறை, இலங்கைச் சாரணர் சங்கத்தின் செய்பாடு அதன் நோக்கம் சம்பந்தமான போதிய அறிவு இருத்தல் வேண்டும்.

b) உதவி பயிற்றுனர் தலைவர் பயிற்சிக்காக விண்ணப்பிப்பவர் குருளை சாரணிய, சாரணர்பிரிவு, திரிசாரணர் பிரிவு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் சிறிலங்கா சாரணர் சங்கத்தால் வழங்கப்பட்ட (சகல பிரிவிலும் பூர்த்தி செய்து) தருசின்னம் பெற்றவராக இருக்க வேண்டும்.

c)

i. **க.பொ.த. உயர்தரம் சித்தி அத்துடன் தருசின்னதாரராக, குறைந்த பட்சம் 05 வருடகாலச் சேவை அல்லது,**

ii. **பயிற்றுனர் ஆசிரியராக அத்துடன் தருசின்னதாரராக, குறைந்த பட்சம் 05 வருடகாலச் சேவை அல்லது,**

iii. **க.பொ.த. சாதாரன தரம் சித்தியடைந்திருந்தால், தருசின்னத்தைப் பெற்று, குறைந்த பட்சம் 10 வருடகாலச் சேவை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

d) **குறிப்பிட்ட பிரிவில் சமீபத்திய 02 வருட காலத்தினுள் சுறுசுறுப்பு மிக்க தலைவராக/தலைவியாக செயல்பட்டு இருத்தலை உறுதிப்படுத்துவதற்கு, கீழ்காணும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.**

i. **சமீபத்திய 02 காலத்திற்காக புதுப்பிக்கப்பட்ட நியமன ஆணைப்பத்திரம்**

ii. **குறித்த துருப்பை அல்லது குழுவை நடாத்திச் செல்லுகிறீர்கள் என்பதற்கான, அதிபர் அல்லது நிறுவன அதிகாரியின் எழுத்து மூல உறுதிப்படுத்தல்.**

e) உதவி பயிற்றுனர் தலைவர் பயிற்சி பாடத்திட்டத்தில் கலந்து கொள்வதாயின் 30வயது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

9. உதவி பயிற்றுனர் தலைவர் A.L.T பயிற்சி பாடத்திட்டம் முடிந்த பின்பு உதவி பயிற்றுனர் தலைவராக நியமனம் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட பிரிவில் கீழ்வருவனவற்றை செயல்படுத்த வேண்டும்.

1. மாவட்ட மட்டம் அல்லது தேசிய மட்டத்தில் ஒருவருட சேவை செய்ய வேண்டும்.
2. கலைக்கூறு I பயிற்சி ஒழுங்கு படுத்தவேண்டும்.
3. கலைக்கூறு I பயிற்சிக்குழுவில் பயிற்சியாளராக முழுநேரமாக கடமையாற்ற வேண்டும்.

4. கலைக்கூறு II பயிற்சிக்குழுவில் பயிற்சியாளராக முழுநேரமாக கடமையாற்ற வேண்டும்.
5. **கலைக்கூறு III ஆலோசகராக, பயிற்சிப் பெறுபவரின் கலைக்கூறு III அறிக்கை கைநூலை, குறித்த காலப்பகுதிக்குள் பூர்த்திச் செய்திருத்தல் வேண்டும்.**
6. கலைக்கூறு IV பயிற்சியின் போது பயிற்சி பெறுபவர்களுக்கு ஆலோசகராக இருத்தல் வேண்டும்.
7. **மேற்குறிப்பிடப்பட்டுள்ள இல. 1 முதல் 6 வரையான அறிக்கைகளை, ஆலோசகரின் சிபாரிசுடன், தேசிய பயிற்சி ஆணையாளர் அவர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.**
8. குறித்த காலத்திற்கு தனது ஆணைப்பத்திரத்தை புதுப்பித்திருத்தல் வேண்டும்.
9. உதவிபயிற்றுனர் தலைவருக்கான மணிக்கழுத்து மாலை வழங்குவது தேசிய பயிற்சி ஆணையாளரின் நேர்முகப்பரீட்சையின் பின் முடிவு செய்யப்படும்.
10. தேசிய பயிற்சி ஆணையாளர் அங்கீகரிக்கப்பட்ட திகதியில் இருந்து உதவி பயிற்றுனர் தலைவர் அங்கீகாரம் செல்லுபடியாகும்.

**10. பயிற்றுனர் தலைவர் பயிற்சிக்கான பாடத்திட்டத்திற்கு தேவையான தகைமைகள்**

1. பயிற்சி வழங்கும் முறை சம்பந்தமான சகல சட்டதிட்டங்களும் தெரிந்திருத்தலும் செயல்படுத்தலும் அத்துடன் சாரணர் வளர்ச்சிக்கான செயல்பாடுகளும் சிறிலங்கா சாரணர் சங்கத்தினால் செயல்படுத்தும் சட்டதிட்ட நடைமுறைகளையும் தெரிந்து இருத்தல் வேண்டும்.
2. உதவி பயிற்றுனர் தலைவராக மூன்று வருடங்கள் பூரண திருப்த்தியான சேவை செய்திருத்தல் வேண்டும். அத்துடன் கலைக்கூறு IV, கலைக்கூறு II ஆகியவற்றில் பயிற்சி வழங்கியவராகவும், கலைக்கூறு I இன் பயிற்சித்தலைவராகவும் இருக்கவேண்டும்.
3. பயிற்றுணர் தலைவர் பயிற்சி பாடவிதானத்தில் பங்கு கொள்வதாயின் 35 வயது பூர்த்தி செய்தவராக இருக்கவேண்டும்.

**11. பயிற்றுணர் தலைவர் நியமனம் பெறுவதற்கு பயிற்றுனர் தலைவர் கற்கைநெறி முடிந்த பின் கீழ்வருவனவற்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

1. மாவட்ட மட்டம் அல்லது தேசிய மட்டத்தில் குறைந்தது ஒரு வருடம் பூர்த்தியான சேவை செய்திருத்தல் வேண்டும்.
2. கலைக்கூறு II பயிற்சித்தலைவராக / தலைவியாக இருந்திருத்தல் வேண்டும்.
3. கலைக்கூறு III இன் ஆலோசகராக தொழிற்பட்டிருத்தல் வேண்டும்.
4. கலைக்கூறு IV பயிற்சிக்கு ஒரு வருட காலத்திற்கு சேவை செய்திருத்தல் வேண்டும்.
5. கலைக்கூறு V தருசின்னம் பெறுபவருக்கு ஆலோசகராக தொழிற்பட்டிருத்தல் வேண்டும்.
6. தேசிய/மாவட்ட மட்டத்தில் மக்கள் தொடர்பு சம்பந்தமான மேம்படும் செயற்பாடு அல்லது அதற்கு மேலான செயற்பாடு.
7. **மேற்குறிப்பிடப்பட்டுள்ள இல. 1 முதல் 6 வரையான அறிக்கைகளை, ஆலோசகரின் சிபாரிசுடன், தேசிய பயிற்சி ஆணையாளர் அவர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.**
8. குறிப்பிட்ட காலத்திற்கு நியமனப்பத்திரம் புதுப்பித்திருத்தல் வேண்டும்.
9. பயிற்றுணர் தலைவருக்கான மணிக்கழுத்து மாலையை, தேசிய பயிற்சி ஆணையாளரின் நேர்முகப்பரீட்சைக்குப் பின் அங்கீகாரம் வழங்கப்படும்.
10. பயிற்றுனர் தலைவர் அங்கீகாரம் தேசிய பயிற்சி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து செல்லுபடியாகும்.

12. **<u>நிர்வாகத்தினரின் பயிற்சி</u>**

நிர்வாகத்தினரின் பயிற்சி கீழ்வரும் முறைப்படி நான்கு வகையாகப்பிரிக்கப்பட்டுள்ளது.

I. குழுச்சாரணர்தலைவரின் பயிற்சி
II. ஆணையாளருக்கான பயிற்சி
III. பொது அதிகாரிகளுக்கான பயிற்சி
IV. தொழில்சார் அதிகாரிகளுக்கான பயிற்சி

13. **<u>சகல பயிற்சி தலைவர்களின் பயிற்சி பாடத்திட்டங்கள்</u>**

I. அனைத்து **<u>வளர்ந்தோர் தலைவர்களுக்கான பயறிசிக் கற்கைநெறிகளை</u>** தேசிய பயிற்சி ஆணையாளரின் எழுத்துமூல அனுமதியைப் குறிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் பெற்ற பின்பதாகவே, நடாத்தப்பட வேண்டும்.

II. எல்லா மாவட்டங்களிலும் பயிற்சிக் **<u>குழுவொன்று</u>** இருக்கவேண்டும். இக் குழுவை, உதவி மாவட்ட ஆணையாளர் (பயிற்சி) அல்லது மாவட்ட ஆணையாளர் அவர்களின் அனுமதியுடன் செயற்படுத்தல் வேண்டும்.

14. சகல பாடத்திட்ட பயிற்சியும் தேசிய பயிற்சி சங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளின்படியும் செயற்திட்டத்தின்படியும் சரியாக செயறபடவேண்டும்.

15. பயிற்சிகள் சகலதும் பயிற்சி அளிக்கும் கையேட்டின் பிரகாரம் (Training Manual) செயற்படுத்தல் வேண்டும்.

**M.E.S. ஜயசிங்க**
**தேசிய பயிற்சி ஆணையாளர்**
**தேசிய பயிற்சி சபை**
**இலங்கைச் சாரணர் சங்கம்**
**2013.10.09**